




# தின தமிழ்

DHINA TAMIL

தினசரி காலை நாளிதழ்

RNI No : TNTAM/2023/85936

மாற்றத்தின் ஆரம்பம்

www.dhinatamil.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5








dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 19.02.2026 . மலர் 04 . இதழ் 49 . வியாழக்கிழமை | dhinatamil | . NAGERCOIL EDITION . 19.02.2026 . VOL 04 . ISSUE 49. THURSDAY . 4 PAGES . Rs. 5


## ஒரு ராஜ்யசபா எம்.பி. சீட்டுக்கு அடம்பிடிக்கும் 4 கட்சிகள்

# நெருக்கடியில் அதிமுக !

## தேமுதிகவை வளைத்து போடுமா திமுக?!

சென்னை, பிப்.19-

ராஜ்யசபா எம்.பி. சீட் கேட்டு டிடிவி தினகரன், ஜி.கே.வாசன், பிரேமலதா ஆகியோர் அடம்பிடிப்பதால் அதிர்ந்து போய் இருக்கிறது அதிமுக. போதாக்குறைக்கு அதிமுகவின் தம்பிதுரையும் இந்த சீட்டை குறிவைத்திருக்கிறார்.

மாநிலங்களவையில் திருச்சி சிவா, என்.ஆர்.இளங்கோ, கனிமொழி சோமு, அந்தியூர் செல்வராஜ் ஆகிய திமுக எம்.பி.க்கள் மற்றும் அதிமுகவின் தம்பிதுரை, அதிமுக ஆதரவோடு எம்.பியான தமாகா தலைவர் ஜி.கே.வாசன் ஆகியோரின் பதவி காலம் முடிவடைவதால், அந்த இடங்களுக்கு மார்ச் 16-ல் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பாகவே ராஜ்யசபா தேர்தல் நடக்கவுள்ளதால், திமுக, அதிமுக எனும் இரு பிரதான கட்சிகளும் பெரும் நெருக்கடியில் சிக்கியுள்ளன. காலியாகும் 6 இடங்களில் தற்போதைய சூழலில் திமுகவுக்கு 4 இடங்களும், அதிமுகவுக்கு 2 இடங்களும் உறுதி. ஆனால், இந்த இடங்களுக்கு கூட்டணி கட்சிகளும் குறிவைத்துள்ளதால், இரு கட்சிகளும் விழிபிதுங்கி நிற்கின்றன.

அலறும் அதிமுக !

இந்த தேர்தலில் அதிமுகவுக்கு கிடைக்கப்போவது என்னவோ இரு எம்.பிக்கள்தான். ஆனால், அதற்கான போட்டிக் களத்தில் உள்ள கூட்டணிக் கட்சிகளின் எண்ணிக்கை எக்கச்சக்கமாக உள்ளது. ஏற்கெனவே தனக்கு ஒரு எம்.பி சீட் என்ற உறுதியைப் பெற்றுக் கொண்டே பாமக தலைவர் அன்புமணி, அதிமுக கூட்டணிக்குள் வந்தார். எனவே அந்த ஒரு இடம் ஏற்கெனவே ரிசர்வ் ஆகிவிட்டது.

அதிமுக வசம் மீதமுள்ள இன்னொரு இடத்துக்கு, கட்சியின் மூத்த தலைவர் தம்பிதுரை ஆவலோடு காத்திருக்கிறார். இவர் தவிர்த்து தமாகா தலைவர் ஜி.கே.வாசனும் தனக்கு மீண்டும் சீட் எதிர்பார்க்கிறார். அதேபோல, 'சட்டப்பேரவைத் தேர்தலில் நான் போட்டியிடப்போவதில்லை' என சொல்லிவிட்ட அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரனும் டெல்லி செல்ல விருப்பமாக உள்ளார். வழக்கம்போல தேமுதிகவும் இந்த ராஜ்ய சீட்டை எப்படியாவது வாங்கிவிட வேண்டுமென ஒற்றைக்காலில் நின்று கொண்டிருக்கிறது.

ஒரு எம்.பி சீட்டாவது நிச்சமயமாக நமது கட்சி நபர்களுக்கு வேண்டும் என அதிமுக தலைவர்கள் சொல்லி வருகின்றனர். மக்களவையில் அதிமுகவுக்கு ஒரு எம்.பி கூட இல்லாத நிலையில், மாநிலங்களவையிலும் அதிமுகவுக்கு 5 எம்.பிக்கள்தான் உள்ளனர். அதிலும், தம்பிதுரையின் பதவிக் காலம் முடிவடைய உள்ளதால், அந்த இடத்தையும் வேறு கட்சிக்கு விட்டுக் கொடுப்பதால், தனது டெல்லி செல்வாக்கு குறையும் எனவும் கவலைப்படுகிறது அதிமுக தலைமை.

அதே நேரத்தில், 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வலுவான கூட்டணியை உருவாக்கும் நெருக்கடியிலும் இபிஎஸ் சிக்கியுள்ளார். எனவே, வேறு மாநிலத்தில் பாஜக கோட்டாவில் ஜி.கே.வாசனுக்கு சீட் கொடுக்கும்படி பழனிசாமி டெல்லிக்கு தகவல் சொல்லியுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது. அதேபோல, சட்டப்பேரவைத் தேர்தல் வெற்றிக்குப் பின்னர் தினகரனின் கோரிக்கையை பரிசீலிப்பதாகவும் அதிமுக உறுதி கொடுத்துள்ளது.

ஏற்கெனவே கடந்த ஆண்டு, அதிமுக வெளியிட்ட அறிக்கையில், '2026=ல் காலியாகும் ராஜ்ய சபா இடங்களில் ஒன்றை தேமுதிகவுக்கு கொடுப்போம்' என சொல்லியிருந்தது. எனவே தேமுதிகவை கூட்டணிக்குள் கொண்டுவந்தால் நிச்சயமாக அவர்களுக்கு ஒரு சீட் கொடுத்தே ஆக வேண்டும். ஆனால், இம்முறையும் தேமுதிகவுக்கு சீட் கொடுக்க அதிமுகவுக்கு விருப்பம் இல்லை என்றே அரசியல் விமர்சகர்கள் கூறுகின்றனர். இதனால்தான் தேமுதிகவிடம் கூட்டணிப் பேச்சுவார்த்தையையே இன்னும் தொடங்காமல் இழுத்தடிக்கிறது அதிமுக என்றும் சொல்கின்றனர்.

ஒரு வேளை பாஜக அழுத்தம் கொடுத்தால், 'உங்கள் கோட்டாவிலேயே தேமுதிகவுக்கு ஒரு சீட் ஒதுக்குங்கள்' என நாசூக்காக சொல்லி வருகிறார் பழனிசாமி. ஒரு மாம்பழத்துக்காக பழநியில் உள்ள சாமி சுற்றி சுற்றி வந்ததைப் போல, ஒரு சீட்டை வைத்துக்கொண்டு கூட்டணிக் கட்சிகளை சுற்றிவர விட்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

திமுகவும் தனது 4 இடங்களை யாருக்கு கொடுப்பது என்ற சிக்கலில் தவித்துக் கொண்டிருக்கிறது. திருச்சி சிவாவுக்கு ஒரு சீட் நிச்சயமாகிவிட்டது. மீதமுள்ள 3 இடங்களில், இம்முறை காங்கிரஸ் தங்களுக்கு ஒரு சீட் கட்டாயம் வேண்டும் என அடம்பிடிக்கிறது. தங்கள் வசம் 17 எம்எல்ஏக்கள் உள்ள நிலையில் ஒரு சீட் ஒதுக்குவதில் என்ன தயக்கம் என்றும் கேள்வியெழுப்பி வருகிறது.

அதேபோல, பாமக ராமதாஸ் தரப்பிலும் எங்களுக்கு சட்டப்பேரவைத் தொகுதி எண்ணிக்கையை குறைத்தாலும், மகள் ஸ்ரீகாந்திக்கு ஒரு ராஜ்யசபா சீட் கொடுத்துவிடுங்கள் என்ற கோரிக்கையோடு கூட்டணிக்கு அணுகி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. அன்புமணிக்கு போட்டியாக ஸ்ரீகாந்தியை டெல்லிக்கு அனுப்புவோம் என காய் நகர்த்தி வருகிறதாம் ராமதாஸ் தரப்பு. இன்னொரு பக்கம் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான சில திமுக புள்ளிகள் தேமுதிகவிடம் பேச்சு நடத்தி வருகின்றனர். அதில் 6 தொகுதிகள் ஒதுக்க உறுதி சொல்லப்பட்ட நிலையில், கூடுதலாக ராஜ்ய சபா சீட் கொடுத்தால் உடனே கூட்டணியில் சேருகிறோம் என்று காத்துக்கிடக்கிறதாம் முரசு கட்சி.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பரபரப்பே பற்றி எரிந்துக் கொண்டிருக்கும் நிலையில், கூடுதலாக ராஜ்ய சபா தேர்தலும் அனலை அதிகமாக்கியுள்ளது. இதனால் கூட்டணிக்குள் புயல் வீசுமோ என்ற பீதியில் உள்ளன அதிமுகவும், திமுகவும்.


## இமயம் சரிந்தது!

மனிதருள் மாணிக்கம்

தோற்றம் : 16-03-1961



மறைவு: 18-02-2026

"இளைய வள்ளல்" Dr. க. ஸ்ரீதரன்

தலைவர்,

கலசலிங்கம் மற்றும் ஆனந்த் கல்வி குழுமம்

அவர்கள் 18.02.2026 அன்று அதிகாலை 4.10 மணியளவில் இயற்கை எய்தினார். அன்னாரது இறுதி சடங்குகள் 19.02.2026 வியாழக்கிழமை மாலை 3.00 மணியளவில் சென்னை, ஆழ்வார்பேட்டை, 52, சீமான் சீனிவாசா சாலையில் உள்ள இல்லத்தில் வைத்து நடைபெறும் என்பதையும், மற்ற நிகழ்வுகள் மாலை 5.00 மணியளவில் பெசன்ட் நகர் மின் மயானத்தில் வைத்து நடைபெறும் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவண்,

குடும்பத்தார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள்

கிருஷ்ணன்கோவில் கேம்பஸ்

கலசலிங்கம் பல்கலைக் கழகம்
கலசலிங்கம் நர்ஸிங் கல்லூரி
கலசலிங்கம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை
அருள்மிகு கலசலிங்கம் பார்மஸி கல்லூரி
அருள்மிகு கலசலிங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
அருள்மிகு கலசலிங்கம் கல்வியியல் கல்லூரி
லிங்கா குளோபல் பள்ளி, கிருஷ்ணன்கோவில் மற்றும் ஆண்டிபட்டி

சென்னை கேம்பஸ்

கலசலிங்கம் பல்கலைக் கழகம்
ஆனந்த் இன்ஸ்டிடியூட் ஆப் ஹையர் டெக்னாலஜி
ஆனந்த் டெக்வொர்ஸ்
ஆனந்த் பில்டர்ஸ்
ஆனந்த் வெண்டர்ஸ்
ஆனந்த் சிங்கப்பூர் இண்டர்நேஷனல் ஸ்கூல்


## மதுரை தெப்பக்குளம் அருகில் உள்ள தியாகராசர் நன்முறை மேல்நிலைப் பள்ளியின் 69 வது ஆண்டு விழாவில் முன்னாள் மாணவராக விருதுநகர் மாவட்டம் இணை இயக்குநர் மற்றும் திட்ட இயக்குநர் வீ. கேசவதாசன் பங்கேற்று மாணவர்களிடையே சிறப்புரை !




மதுரை பிப்ரவரி 19-

மதுரை தெப்பக்குளம் அருகில் உள்ள தியாகராசர் நன்முறை மேல்நிலைப் பள்ளியில் 69 வது ஆண்டு வெகு சிறப்பாக விழா நடைபெற்றது.

இவ்விழாவில் இப்பள்ளியில் பயின்ற முன்னாள் மாணவர் விருதுநகர் மாவட்டம் இணை இயக்குநர் /திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை வீ.கேசவதாசன். பங்கேற்றார்.

வருகை புரிந்த சிறப்பு விருந்தினருக்கு பள்ளி நிர்வாகம் சார்பில் பொன்னாடை போர்த்தி உற்சாக வரவேற்பு செய்யப்பட்டது.

அதன் பிறகு சிறப்பு விருந்தினர் விழா அரங்கில் மாணவர்களிடையே பேசுகையில் இப்பள்ளியில் பயின்ற பல ஸ்வாரஷ்யமான நிகழ்வுகளை பகிர்ந்து கொண்டார் அதன் தொடர்ச்சியாக தியாகராஜர் கல்லூரியில் மேற்படிப்பு மேற்கொண்டு அதன் மூலம் என்சிசி பயிற்சியின் வாயிலாக பல்வேறு மாநிலங்களுக்கு சென்று வந்த அனுபவங்களை எடுத்துரைத்தார்,

அதன் தொடர்ச்சியாக அரசு பணியாளர் தேர்வு கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் தொடங்கி ஒவ்வொரு துறையிலும் சாதனை நிகழ்த்தி வந்த பிறகு குரூப் 1 தேர்வில் தேர்ச்சி பெற்று சிவகங்கை மாவட்டம் கிராம பஞ்சாயத்து உதவி இயக்குநராக பணியாற்றி தற்பொழுது விருதுநகர் மாவட்டத்தின் இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை அதிகாரியாக பணியாற்றி வருகிறேன் இதற்கு எல்லாம் இப்பள்ளியில் பயின்ற கல்வி தான் எனக்கு அடித்தளமாக அமைந்தது எனவே மாணவர்களாகிய நீங்கள் அனைவரும் படிப்பில் கவனம் செலுத்தி லட்சிய பயணம் மேற்கொண்டால் நிச்சயமாக நீங்களும் ஒரு நாள் இதே மேடைக்கு பள்ளி ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்கலாம் என்று மாணவர்களுக்கு உற்சாகமூட்டி பல்வேறு கருத்துக்களை முன் வைத்து எடுத்துக் கூறினார்.

அதன் பின்னர் இப்பள்ளியில் தமிழ்நாடு அரசு பொதுத் தேர்வில் 10-வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். அதன் தொடர்ச்சியாக மாநில அளவில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற வீரர்களுக்கு நற்சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார். இதற்கான ஏற்பாடுகளை பள்ளி நிர்வாகத்தின் சார்பில் சிறப்பாக செய்திருந்தனர்.



மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பெடரல் வங்கியின் சமூக பொறுப்பு நிதியின் மூலமாக ரூபாய்.2.72 லட்சம் மதிப்பீட்டில் 50 மேசைஇருக்கை நாற்காலிகளை மாணவமாணவிகளின் பயான்பாட்டுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் வழங்கி சிறப்புரையாற்றி, பள்ளி வளாகத்தில் குடிநீராகும் கூரை நீர் கழிவுநீர் மேலாண்மை மற்றும் வழிபாட்டு மலர்களால் ஏற்படும் நீர் மாசுபாடு காயந்த மலர்களில் இருந்து சாம்பிராணி தயாரித்தல் உள்ளிட்ட சுற்றுச்சூழல் சார்ந்த புதுமையான மாணவமாணவிகளின் அறிவியல் படைப்புகளை பார்வையிட்டு மாணவர்களின் புதுமை முயற்சிகளை பாராட்டினார்.



மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், அ.தொட்டியபட்டியில் முன்னாள் படைவீரர் நல அலுவலகம் சார்பில் போர் விதவையர் முத்துலட்சுமி அவர்களையும், தனவு இரு மகன்களையும் இராணுவ பணிக்கு அனுப்பிய பெற்றோர் திருமதி.கார்த்திகை அம்மாள் அவர்களையும் மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து வருடாந்திர பராமரிப்பு மானியம் மற்றும் போர்பணி ஊக்க மானியம் வழங்கி கௌரவித்தார். உசிலம்பட்டி சார் ஆட்சியர் உட்கர்ஷ் குமார் உடன் உள்ளார்.

## மதுரை மீனாட்சி சூப்பர் ஸ்பெசாலிட்டி மருத்துவமனை மற்றும் மதுரை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து நியூரோ எண்டோஸ்கோபிக் 2026 என்ற மூன்று நாள் சிறப்பு மாநாடு




மதுரை, பிப்ரவரி. 19-
மதுரை மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் மீனாட்சி நியூரோ எண்டோஸ்கோபிக் 2026 என்ற சிறப்பு மருத்துவ மாநாடு நடைபெற உள்ளது.

இது தொடர்பாக நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேட்டியளித்த இம் மருத்துவமனையின் மூளை நரம்பியல் அறுவை சிகிச்சைத் துறைத் தலைவர் மற்றும் முதுநிலை நிபுணர் டாக்டர் செல்வமுத்துக்குமரன் கூறியதாவது. மண்டையோட்டின் அடிப்பகுதியில் செய்யப்படும் எண்டோஸ்கோபிக் அறுவை சிகிச்சைகள் குறித்து தமிழ்நாட்டில் நடைபெறும் முதல் பிரத்யேக மாநாடு ஆகும் இம்மாநாடு பிப்ரவரி 20 முதல் 22 வரை மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது இதில் நரம்பியல் மூளை நரம்பியல் அறுவை சிகிச்சை காது மூக்கு தொண்டை மருத்துவத் துறையை சேர்ந்த இளம் மருத்துவர்களுக்கு மூளையின் அடிப்பகுதியில் மிக ஆழமாக அமைந்திருக்கும் கட்டிகள் மற்றும் புண்களுக்கு குறைவான ஊடுருவல் முறையில் சிகிச்சை அளிக்கும் நவீன நுட்பங்களைக் கற்றுக்கொடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

இதில் மதுரை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்து நடத்தப்படும் இம்மாநாட்டில், டெல்லி எய்ம்ஸ் உள்ளிட்ட நாட்டின் முன்னணி மருத்துவ நிறுவனங்களைச் சேர்ந்த 20-க்கும் மேற்பட்ட முதுநிலை மருத்துவ நிபுணர்கள் கலந்து

கொண்டு பயிற்சி அளிக்கவுள்ளனர். மண்டை ஓட்டின் உள்அமைப்பு மற்றும் எண்டோஸ்கோபிக் சிகிச்சை முறைகள் குறித்த நேரடிப் பயிற்சிகளுடன், விரிவான விளக்கவுரைகளும் இதில் இடம் பெறும்

மேலும் தமிழ்நாட்டில் இவ்வளவு பெரிய அளவில் தேசிய நிபுணர்களைக் கொண்டு மண்டை ஓட்டு அடிப்பகுதி சிகிச்சைக்காக ஒரு மாநாடு நடப்பது இதுவே முதல் முறை வழக்கமான அறுவை சிகிச்சையைப் போலன்றி இந்த விரிவாக்கப்பட்ட முறை மிகவும் மேம்பட்டது இதன் மூலம் மண்டை ஓட்டின் முன்பகுதி மற்றும் நடுப்பகுதி, மூளைத்தண்டுக்கு அருகில் உள்ள இடங்கள் மூக்கு மற்றும் சைனஸ் பகுதிகளுக்குப் பின்னால் உள்ள இடங்கள் மற்றும் தண்டு வடத்தின் மேல் எலும்புடன் இணைந்திருக்கும் பகுதிகள் போன்ற மிகச் சிக்கலான இடங்களிலும் ஊடுருவி கட்டிகளை அகற்றி சிகிச்சையை அளிக்க முடியும் என்று கூறினார். இந்நிகழ்வில் மருத்துவ நிபுணர்கள் செந்தில் குமார், நாகேஸ்வரன் கௌதம் குஞ்சா மற்றும் மருத்துவமனை நிர்வாகம் திலீப் ஆகியோர் உடனிருந்தனர்.

## திருவள்ளூர் அடுத்த கடம்பத்தூர் பகுதியில் நாளை நமதே தமிழ்நாடு நமதே என்ற தலைப்பில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம்




திருவள்ளூர், பிப்ரவரி. 19-
திருவள்ளூர் அடுத்த கடம்பத்தூர் பகுதியில் நாளை நமதே தமிழ்நாடு நமதே என்ற தலைப்பில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில் தெருமுனை பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.

இந்த பொதுக்கூட்டத்தில் அதிமுக பாஜக பாமக அமமுக புரட்சி பாரதம் தமிழ் தேசிய காங்கிரஸ் கட்சிகளைச் சார்ந்த ஒன்றிய செயலாளர்கள் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டு கூட்டணிக்கு ஆதரவாக வாக்குகளை சேகரித்தனர்.

இதில்

இளைஞர்களுக்கு படித்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்காத தோல்வி அடைந்த அரசாங்கமாக திமுக அரசாங்கம் கடந்த ஐந்து ஆண்டுகளாக இருந்து வந்து கொண்டிருக்கிறது இதை யாரும் மறுக்க முடியாது திமுக காரர்களை மறக்கவும் முடியாது என்று முன்னாள் அமைச்சர் மற்றும் திருவள்ளூர் மேற்கு மாவட்ட அதிமுக செயலாளர் பி.வி.ரமணா தெருமுனை கூட்டத்தில் பேசினார்.

அதனைத் தொடர்ந்து திருவள்ளூர் மேற்கு மாவட்ட பாஜக தலைவர் அஸ்வின் பேசியதாவது திமுகவினர் கடந்த தேர்தலில் மக்களிடத்தில் ஒன்றிணைவோம் வா என அழைத்தார் நாமும் சேர்ந்து வளர போகிறோம் என எண்ணிய பொதுமக்கள் ஒன்று சேர்ந்து வாக்களித்து திமுக ஆட்சியை வரவழைத்தார்கள் ஆனால் வளர்ந்தது திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல்வர் குடும்பம் மட்டும்தான் வளர்ந்து இருக்கிறது உதயநிதி ஸ்டாலின் ஒரு கார் வைத்திருந்தார் தற்போது பதினொரு கார் வைத்திருக்கிறார், சபரீசன் தற்பொழுது லட்சிய கோடி அளவுக்கு சம்பாதித்து வைத்திருக்கிறார் ஆக மொத்தம் அவர் குடும்பம் மட்டுமே சம்பாதித்து இருக்கிறது முதலில் நீங்கள் உங்களது அண்ணன் அழகிரியுடன் ஒன்றிணையுங்கள் பின்னர் தமிழக மக்களுடன் ஒன்றிணையுங்கள்

எந்த திமுக கட்சியை சார்ந்தவரும் வளரவில்லை திமுக கட்சி குடும்பமும் வளரவில்லை ஒரே ஒரு குடும்பம் மட்டுமே வளர்ந்திருக்கிறது மீண்டும் அப்படிப்பட்ட ஆட்சி வேண்டுமா? என சிந்திக்க வேண்டிய நேரம் இது அப்படி சிந்தித்தால் தேசிய ஜனநாயக கூட்டணி சேர்ந்த வேட்பாளர்களுக்கு பொது மக்கள் வாக்களிப்பார்கள் வெற்றிபெற செய்வார்கள் என்று பேசி மக்களிடையே கூட்டணிக் கட்சிக்கு ஆதரவு திரட்டினார்.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp-ல்
பின் தொடர

## குமரியில் வேலை வாங்கித் தருவதாக பலரிடம் பணம் வசூல் : மின்வாரிய பெண் அதிகாரி மீது புகார்

நாகர்கோவில், பிப். 19-
நாகர்கோவில் கட்டையன்விளை மின்வாரிய அலுவலகத்தில் தற்காலிக டிரைவராக ஜீவா என்ற வாலிபர் பணியாற்றி வந்தார். அவர் தற்போது சமூக வலைத்தளங்களில் ஒரு வீடியோ வெளியிட்டுள்ளார். அது வைரலாகி வருகிறது. அந்த வீடியோவில் அவர் கூறியிருப்பதாவது:-

நான் நான் கட்டையன் விளை யில் உள்ள மின்வாரிய அலுவலகத்தில் தற்காலிக ஓட்டுனராக பணியாற்றினேன். அப்போது பெண் அதிகாரி ஒருவர் என்னுடன் என்னிடம் நிறைய பேருக்கு மின்வாரியம் மட்டுமின்றி பல்வேறு துறைகளில் அரசு வேலை வாங்கி கொடுத்துள்ளேன் எனவும், இப்போது மின்வாரியத்தில் நிரந்த டிரைவர் பணியிடம் நிரப்ப உள்ளனர். ரூ.5 லட்சம் கொடுத்தால் உனக்கு அந்த வேலை நிரந்தரமாக வாங்கி தருவேன் என்று கூறினார். மேலும் உனக்கு தெரிந்த நபர்களும் பணம் கொடுத்தால் வேலை கிடைக்கும் என்று கூறினார்.

அரசு வேலை என்பதால் நான் ரூ. 5 லட்சம் கொடுத்ததுடன், எனது நண்பர்கள் உறவினர்கள் என்று மொத்தம் ரூ20 லட்சம் கொடுத்தோம். மேலும் எனது வங்கி கணக்கில் இருந்து அவருக்கு ஷோபா, செல்போன் வாங்க லோன் எடுத்துக் கொடுத்தேன்.

ஆனால் திடீர்னு அந்த பெண் அதிகாரி வேறு மாவட்டத்திற்கு சென்று விட்டார்.

அவர் கூறியபடி வேலை வாங்கி தரவில்லை. எங்களிடம் வாங்கிய பணத்தையும் தரவில்லை. இது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். போலீசார் வழக்கு பதிவு செய்ய மறுத்தனர். பின்னர் நீதிமன்ற உத்தரவு பெற்று வடசேரி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால் அந்த பெண் அதிகாரி மீது கைது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. 4 முறை நீதிமன்றத்தின் முன் ஜாமீனும் நிராகரிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் காவல்துறை அந்தப் பெண் அதிகாரி கைது செய்யவில்லை. எனக்கு தெரிந்து 20க்கும் மேற்பட்டவர்களிடம் கோடிக் கணக்கில் மோசடி செய்துள்ளார். ஐஜி, எஸ்பியிடம் மனு அளித்தோம். நடவடிக்கை எடுக்கவில்லை. எனக்கு மிரட்டல் வருகிறது. உயிருக்கு பயமாக உள்ளது. வேலை இல்லாமல் நான் தற்கொலை செய்யும் முடிவில் உள்ளேன். இவ்வாறு அவர் அந்த வீடியோவில் கூறியுள்ளார்.

## வெளிநாட்டில் வேலை வாங்கி தருவதாக 130 நபர்களிடம் ரூ 1.50 கோடி ஏமாற்றிய நபர் கைது

நாகர்கோவில், பிப்.19-
குமரி மாவட்டம் மாதவபுரம் பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்த ராம்குமார் என்பவரது மகன் சந்தோஷ் (31). இவர் அந்த பகுதியில் வெளிநாட்டிற்கு ஆட்களை அனுப்பும் நிறுவனத்தை தொடங்கினார்.

பின்னர் வெளிநாட்டில் உள்ள பிரபல நிறுவனங்களில் வேலை வாங்கி தருவதாக சுமார் 130 நபர்களிடம் ரூ 2 லட்சம் முதல் 3 லட்சம் வரை பணம் பெற்றுக் கொண்டு வேலைக்கு அனுப்பாமலும், சிலரை விசிட்டிங் விசாவில் வெளிநாட்டிற்கு அனுப்பி வேலைவாங்கி தராமல் திருப்பி அனுப்பியதும் விசாரணையில் தெரிய வந்தது.

இது குறித்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலினிடம் பாதிக்கப்பட்டவர்கள் சிலர் புகார் மனு ஒன்றை அளித்தனர். அந்த புகார் மனு மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க மாவட்ட குற்றப்பிரிவு போலீசாருக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

உத்தரவின்படி காவல்துணை கண்காணிப்பாளர் தலைமையில் குற்றப்பிரிவு போலீசார் விசாரணையை தொடங்கினர். விசாரணையில் 130 பேரிடம் பணம் பெற்றுக்கொண்டு சுமார் ஒரு கோடியே ஐம்பது லட்சம் ரூபாய் ஏமாற்றியது தெரியவந்தது.

இந்நிலையில் மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் மேற்படி குற்றவாளி சந்தோஷ் என்பவரை மதுரையில் வைத்து கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். புகார் அளித்த 24 மணி நேரத்திற்குள் குற்றவாளி கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் மாவட்ட போலீஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் - மேற்கண்ட நபரிடமோ அல்லது நிறுவனத்திடமோ யாரேனும் பணம் கொடுத்து ஏமாந்திருந்தால் மாவட்ட குற்றப்பிரிவில் நேரடியாகவோ அல்லது 9498196976 என்ற எண்ணிற்க்கோ தொடர்பு கொண்டு புகார் அளிக்கலாம்.

மாவட்டத்தில் உள்ள இளைஞர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பின் உண்மை தன்மை மற்றும் ஏஜென்ட்டுகள் குறித்து ஏதேனும் சந்தேகம் இருந்தால் கன்னியாகுமரி மாவட்ட காவல்துறையின் 7010363173 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம். இது போன்ற மோசடிகளில் சிக்கி கொண்டால் கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வாட்சப் எண்ணிலோ (8122223319) அல்லது நேரடியாகவோ புகார் அளிக்கலாம். வேலை வாங்கி தருவதாக பணம் பெற்று ஏமாற்றுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தொடர்ச்சியாக இச்செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் எச்சரித்துள்ளார்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள் !

## மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் நலஉதவிகள் வழங்கிய கலெக்டர் !



தூத்துக்குடி, பிப்.19-
தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த பொதுமக்கள் கல்வி உதவித்தொகை மற்றும் முதியோர்/விதவை உதவித்தொகை, இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் பட்டா மாறுதல் உத்தரவுகள், கலைஞரின் கனவு இல்லம், தொழில் கடனுதவி மற்றும் வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 950 மனுக்களை அளித்தனர்: மனுக்களைப் பெற்றுக்கொண்ட ஆட்சியர், அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுத்து தகுதியுள்ள பயனாளிகளுக்கு விரைந்து தீர்வு காண துறை சார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். முன்னதாக, 13 மாற்றுத்திறனாளிகளை நேரில் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்த ஆட்சியர், கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டார்.

கடந்த 06.12.2025 அன்று தமிழக முதலமைச்சரால் காலாங்கரையில் திறந்து வைக்கப்பட்ட கூட்டத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பிற உதவிகளை ஆட்சியர் வழங்கினார். மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம் சார்பில் 5 பயனாளிகளுக்கு தலா ரூ.5,479 மதிப்பிலான தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன.

பனை விதைகள் நடும் நெடும் பணி 2025" திட்டத்தில் சிறப்பாகச் செயல்பட்டு, நீர்நிலைகளில் பனை விதைகளை நட்டதற்காக Mother Social Service Trust மற்றும் கிராம உதயம் இயக்கம் ஆகிய தொண்டு நிறுவனங்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ஆ.இரவிச்சந்திரன், மாவட்ட வன அலுவலர் இளையராஜா, ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் சேதுராமலிங்கம் (பொது), உலகநாதன் (சத்துணவு), மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் பென்னட் ஆசீர், மாற்றுத்திறனாளி நல அலுவலர் பிரமநாயகம் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தேவதானப்பட்டி மூங்கிலணை காமாட்சியம்மன் கோவில் திருவிழா : பாஜக சார்பில் நீர் மோர் வழங்கல்



தேனி, பிப்.19-
தேனி மாவட்டம், தேவதானப்பட்டி பகுதியில் உள்ள அருள்மிகு மூங்கிலணை காமாட்சியம்மன் திருக்கோவில் திருவிழாவை முன்னிட்டு, பாரதிய ஜனதா கட்சி சார்பில் பொதுமக்களுக்கு நீர் மோர் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு மோகன்ராஜ் (மாவட்ட துணை தலைவர்) தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் த. ஒச்சாத்தேவர் (மாவட்ட செயலாளர்), விஜயகுமார் (முன்னாள் தலைமை ஆசிரியர்), முருகன் (ஒன்றிய தலைவர்), ஆர்.சத்திவேல் (துணை தலைவர்), கே.பி. எம்.கணேசன் (மாவட்ட துணை தலைவர்), க. குமரேசன் (மாவட்ட செயலாளர்), பெரியசாமி (செயலாளர்), குமரேசன் (ஒன்றிய பொதுசெயலாளர்), சதிஸ் (ஒன்றிய பொதுசெயலாளர்), முத்துலெட்சுமி (மகளிர் அணி), கூந்தல் ராஜேந்திரன் (மாவட்ட செயற்குழு) உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

## கமுதி அருகே அக்னி வீரபத்ரர் சுவாமி கோவிலில் மாசிக் களரி குலதெய்வ வழிபாடு



கமுதி, பிப்ரவரி. 19-
இராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகே உள்ள புதுக்கோட்டை கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ அக்னி வீரபத்திரர் சுவாமி திருக்கோவில் ஆலயத்தில் மகா சிவராத்திரி விழாவை முன்னிட்டு மாசிக்களரி திருவிழா கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்று வருகிறது.

இரண்டு ஆண்டுக்கு ஒருமுறை நடைபெறும் இந்த மாசிக்களரி திருவிழாவில் நேற்று கிராமத்தின் கிழக்கு பகுதியில் உள்ள விநாயகர் கோவிலில் இருந்து வானவேடிக்கை, தாரை தப்பட்டை, ஜிப்லா மேளம், ஜெண்டை மேளம் உட்பட பல்வேறு மேளதாளங்களுடன் 200க்கும் பெண்கள் பால்குடம் எடுத்து ஊர்வலமாக வந்தனர். இதில் சிறியவர் முதல் பெரியவர்கள் வரை ஏராளமான ஆண்கள் பெரிய வேல் குத்தி தங்களது நேர்த்திக் கடன்களை செலுத்தினர்.மேலும் மாற்றுத்திறனாளி பக்தர் ஒருவர் பெரிய வேல் குத்தி நேர்த்திக் கடன் செலுத்தினார்.

நீண்ட தூரம் ஊர்வலமாக சென்று அக்னி வீரபத்திரர் சுவாமி கோவிலுக்கு சென்று தங்களது நேர்த்திகடங்களை நிறைவேற்றினர்.

பின்னர் சுவாமிக்கு 16 வகையான சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. அதன் பின்னர் பொதுமக்கள் அனைவருக்கும் பிரசாதம் மற்றும் அன்னதானங்கள் வழங்கப்பட்டது.

## அறிவிப்பு

வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் திருப்பூர் மாவட்டம்.
நாள்:17.02.2026 ஒ.மு.8511/2025/ஆ2

திரு. பரமசிவம் த/பெ. மணி, க.எண்.3/519, சூரிய கிருஷ்ணா நகர், முருகம்பாளையம், திருப்பூர் மாவட்டம்.
–மனுதாரர்.

இல்லை.
–எதிர் மனுதாரர்.

மேற்கண்ட முகவரியில் வசிக்கும் திரு.பரமசிவம் என்பவரது தாத்தா, தன்னாசியப்பன், என்கின்ற ராமசாமி என்பவர் திருப்பூர் இடுவம்பாளையம் முருகம்பாளையம் மாகாளியம்மன் கோவில் வீதி முதல் வீதி க.எண். 3/26 என்ற முகவரியில் கடந்த 06.04.1999 ஆண்டு தேதியன்று இறந்தது தொடர்பாக, அவரது இறப்பினை அந்நேரத்தில் பதிவு செய்ய தவறிய நிலையில் கால தாமதக் கட்டணத்துடன் இறப்பு சான்று பதிவு செய்து தர வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்துள்ளார். இம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் இந்த அறிவிப்பு பிரதி வெளியான 15 நாட்களுக்குள் கனம் வருவாய் கோட்டாட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது அவசியம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர்,
திரு. பரமசிவம்

# வேலூரில் பிரதமர் மோடி பங்கேற்கும் பிரம்மாண்ட பொதுக்கூட்டம் : மார்ச் 7-ஆம் தேதிக்கு மாற்றம் - பாஜக தலைவர்கள் நேரில் ஆய்வு



வேலூர், பிப்.19-

தமிழகத்தில் தேர்தல் பரப்புரை சூடு பிடித்துள்ள நிலையில், பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் தேசிய ஜன நாயகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து வேலூரில் நடைபெறும் பிரம்மாண்ட பொதுக்கூட்டத்தில் உரையாற்ற உள்ளார். முன்னதாக மார்ச் 6-ஆம் தேதி நடைபெறுவதாக இருந்த இந்தப் பொதுக்கூட்டம், நிர்வாகக் காரணங்களால் தற்போது மார்ச் 7-ஆம் தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இதனையொட்டி, பொதுக்கூட்டம் நடத்துவதற்கான இடத்தைத் தேர்வு செய்யும் பணிகளில் பாரதிய ஜனதா கட்சி மற்றும் அதன் கூட்டணிக் கட்சியினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

**இடத்தேர்வு குறித்து கார்த்தியாயினி பேச்சு:**

இதன் ஒரு பகுதியாக, வேலூர் கோட்டை மைதானத்தில் பாஜக மாநிலத் துணைத் தலைவர் கரு. நாகராஜன் மற்றும் மாநிலப் பொதுச் செயலாளர் கார்த்தியாயினி ஆகியோர் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வுக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய மாநிலப் பொதுச் செயலாளர் கார்த்தியாயினி, "பிரதமர் மோடி அவர்கள் பங்கேற்கும் இந்த மாபெரும் மாநாட்டைச் சிறப்பாக நடத்துவதற்காக மத்திய இணை அமைச்சர் எல். முருகன் தலைமையில் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக வேலூர் கோட்டை மைதானம், கந்தநேரி மற்றும் அதனை ஒட்டியுள்ள சில பகுதிகள் என மூன்று இடங்களைப் பார்வையிட்டுள்ளோம். இதில் பாதுகாப்பு மற்றும் வசதிகளுக்கு ஏற்றவாறு ஒரு இடம் இன்று மாலைக்குள் இறுதி செய்யப்படும். சுமார் ஒன்றரை லட்சம் பேர் வரை இந்தப் பொதுக்கூட்டத்தில் பங்கேற்பார்கள்" எனத் தெரிவித்தார்.

**5 லட்சம் பேர் திரள்வார்கள் – கரு. நாகராஜன்:**

தொடர்ந்து பேசிய மாநிலத் துணைத் தலைவர் கரு. நாகராஜன், "வேலூர் மட்டுமன்றி திருப்பத்தூர், ராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை ஆகிய அண்டை மாவட்டங்களிலிருந்தும் அதிமுக, பாமக உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் என சுமார் 5 லட்சம் பேர் வரை இந்தப் பொதுக்கூட்டத்தில் திரள்வார்கள் என எதிர்பார்க்கிறோம். பிரதமரின் இந்த வருகை தமிழக அரசியலில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்" என நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாவட்டப் பொறுப்பாளர்கள் மற்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் உடனிருந்தனர். பிரதமரின் வருகையையொட்டி வேலூர் மாவட்டத்தில் இப்போதே பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளது.

# கிருஷ்ணன்கோவில் கலசலிங்கம் பல்கலைக்கழகம் வேந்தர் , டாக்டர் கே. ஸ்ரீதரன் மறைவிற்கு பத்திரிக்கை நிருபர்கள் இரங்கல்



விருதுநகர், பிப்.19-

கிருஷ்ணன்கோவில் அருள்மிகு கலசலிங்கம் பல்கலைக் கழகத்தின் ஆற்றல்மிகு வேந்தர் டாக்டர் கே ஸ்ரீதரன் மறைவுக்கு பத்திரிகையாளர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா கிருஷ்ணன்கோவில் அருள்மிகு கலசலிங்கம் பல்கலைக் கழகத்தின் ஆற்றல்மிகு வேந்தர் டாக்டர் கே ஸ்ரீதரன் (ஐயா) மறைவு செய்தி கேட்டு வேந்தரின் குடும்பத்தார்கள் மற்றும் உறவினர்கள் கலசலிங்கம் கல்விக் குழுமத்தில் பணியாற்றும் அனைத்து துறை பேராசிரியர்கள், பல்கலைக்கழக அலுவலர்கள் மாணவர்கள் மாணவிகள் மற்றும் அனைத்துப் பிரிவு பணியாளர்கள் அனைவரும் வேந்தரின் மறைவு செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர் அனைவருக்கும் பத்திரிக்கை நிருபர்கள் மற்றும் ஏஜெண்டுகள் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம் என கூறப்பட்டுள்ளது.

# திருமணமான 8 மாதத்தில் விபத்து மூளை சாவு அடைந்த புது மாப்பிள்ளை உடல் உறுப்புகள் தானம்

## குமரி மாவட்ட நிர்வாகம் சார்பில் அஞ்சலி!!



நாகர்கோவில், பிப்.19-

திருநெல்வேலி மாவட்டம் ஆவரைகுளம் பகுதியை சேர்ந்தவர் மகேஷ் (24). கடந்த 8 மாதங்களுக்கு முன்பு குமரி மாவட்டம் மருங்கூர் பகுதியை சேர்ந்த இளம் பெண் ஒருவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இந்த நிலையில் கடந்த 16ஆம் தேதி மாலையில் காவல்கிணறு பாலத்தில் பைக்கில் சென்று கொண்டிருந்த மகேஷ் விபத்தில் சிக்கினார். இதில் அவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டு சுயநினைவை இழந்தார். தொடர்ந்து அவரை குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு தீவிர சிகிச்சை அளித்தனர்.

ஆனாலும் மகேஷுக்கு மூளைச்சாவு ஏற்பட்டது. இதை அடுத்து அவரது உடல் உறுப்புகளை தானமாக எடுக்க டாக்டர்கள் முடிவு செய்தனர். இது குறித்து மகேசின் குடும்பத்தினருடன் பேசினர். அப்போது திருமணமாகி 8 மாதமே ஆனதால் எப்படி சாத்தியம்? என்று முதலில் உறவினர்கள் தயங்கினர்.

ஆனால் டாக்டர்கள் நிலைமை எடுத்துக் கூறினார்கள். மகேஷ் குடும்பத்தார் எடுக்கும் முடிவால் பிறருக்கு உயிர் கொடுக்க முடியுமென மகேஷின் மனைவியிடம் டாக்டர்கள் கூறினார்கள். பின்னர் மகேஷ் மனைவி கணவரின் உடல் உறுப்புகளை தானமாக கொடுக்க சம்மதம் தெரிவித்தார்.

இதை அடுத்து ஆபரேஷன் மூலம் மகேசன் உடல் உறுப்புகளை தானமாக எடுக்க டாக்டர்கள் முடிவு செய்தனர். குமரி மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் லியோ டேவிட் மேற்பார்வையில் இதற்கான குழு அமைக்கப்பட்டு நேற்று காலை இதற்கான அறுவை சிகிச்சையை டாக்டர்கள் செய்தனர்.

அதன்படி மகேஷின் 2 கிட்னியில் ஒன்று திருச்சி மருத்துவமனைக்கும், மற்றொன்று காரைக்குடிக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. தோல் மதுரை மருத்துவமனைக்கும், லிவர் (கல்லீரல் ) திருச்சிக்கும் கொண்டு செல்லப்பட்டது. கண் நாகர்கோவில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது.

உடல் உறுப்புகளை தானமாக கொண்டு செல்லும் வாகனங்கள் எளிதில் செல்லும் வகையில் காவல்துறை சார்பில் போக்குவரத்து சீரமைக்கப்பட்டது. திருமணமான 8 மாதத்தில் விபத்தில் மூளைச் சாவடைந்த வாலிபர் உடல் உறுப்புகள் தானமாக வழங்கிய நிகழ்வு பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தொடர்ந்து மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மகேஷின் உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. டாக்டர்கள், மருத்துவ மாணவ, மாணவிகள் மகேஷ் உடலுக்கு மரியாதை செலுத்தினர். கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் சார்பிலும் மகேஷ் உடலுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.




# போலீசில் சிக்கிய பைக் திருடன் !



களியக்காவிளை, பிப், 19 -

குழித்துறையில் பைக் திருடிய திருடனை போலீசார் கைது செய்துள்ளனர்

கேரளா மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டம் ஸ்ரீவிசாரம் நளின விகார் வீட்டை சார்ந்த ராமச்சந்திரன் மகன் பிரமோத் சந்திரன் (35) இவர் வெல்டிங் வேலை செய்து வருகிறார். அத்துடன் இரவு நேரங்களில் திருட்டு தொழிலும் செய்து வந்துள்ளார். இந்நிலையில் இவர் கடந்த வாரம் குழித்துறையில் ஒரு வீட்டில் இருந்து பைக் திருடிச் சென்றுள்ளார். இது தொடர்பாக போலீசார் திருடனை தேடி வந்துள்ளனர். திருடனை கைது செய்த போலீசார் பைக் பறிமுதல் செய்துள்ளனர். இது குறித்து களியக்காவிளை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரனை நடத்தி வருகின்றனர்.

# கன்னியாகுமரி அருகே அழுகிய நிலையில் சடலமாக கிடந்த திருநங்கை கொலையா?

நாகர்கோவில், பிப்.19-

கன்னியாகுமரி ஜீரோ பாய்ண்ட் அருகே உள்ள தனியாருக்கு சொந்தமான காம்பவுண்ட் பகுதியில் நேற்று முன்தினம் காலையில் துர்நாற்றம் வீசியது. இது குறித்து அக்கம் பக்கத்தினர் கன்னியாகுமரி காவல் நிலையத்தில் தகவல் தெரிவித்தனர். போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது அங்கு ஒரு திருநங்கையின் சடலம் கிடந்தது. போலீசார் சடலத்தை பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

முதற்கட்ட விசாரணையில் இறந்தது கேரளாவை சேர்ந்த திருநங்கை பத்மினி (54) என்பது தெரிய வந்தது. தற்போது அவர் மார்த்தாண்டம் பகுதியில் வசித்து வந்ததாகவும் தெரிகிறது. சம்பவம் குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இது தொடர்பாக மர்ம சாவு என வழக்கு பதிவு செய்துள்ளார்கள். மேலும் போலீசார் சம்பவ பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்து வருகிறார்கள். யாராவது திருநங்கை பத்மினியை அழைத்து செல்கிறார்களா? அல்லது அவர் மட்டும்தான் சென்றாரா? என்பது தொடர்பாக ஆய்வு செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனை அறிக்கைக்கு பின் இறப்பு எப்படி நேர்ந்தது என்பது தெரிய வரும் என போலீசார் கூறியுள்ளனர். அவர் இறந்து மூன்று நாட்களுக்கு மேலாகி இருக்கலாம் என கூறப்படுகிறது.

இது போன்று சுங்கான் கடை மலைப்பகுதியில் உள்ள குளத்திலும் பாதி உடல் அழுகி எலும்பு கூடான நிலையில் கடந்த வாரம் இளம் பெண் ஒருவர் உடல் மீட்கப்பட்டது. இரணியல் போலீசார் உடலை மீட்டு பரிசோதனைக்கு குமரி அரசு மருத்துவ கல்லூரி அனுப்பி வைத்தனர். இறந்தவர் கொடூரமாக கொலை செய்யப்பட்டு சாக்கு முடையில் கட்டி குளத்துக்குள் வீசப்பட்டுள்ளது தெரிய வந்துள்ளது. இது தொடர்பாகவும் 3 தனிப்படைகள் அமைக்கப்பட்டு விசாரணை நடக்கிறது. ஆனால் ஒரு வாரமாகியும் இன்னும் துப்பு துலங்கவில்லை. குமரியில் இது போன்ற மர்ம சாவுகள் தொடர்ந்து வருகிறது.

# கிருஷ்ணகிரியில் பாஜக பட்டியல் அணி சார்பாக திமுக அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



கிருஷ்ணகிரி, பிப். 19-

கிருஷ்ணகிரி பேருந்து நிலையம் அருகே பாஜக பட்டியலின அணி சார்பாக மாவட்டத் தலைவர் கே சண்முகம் தலைமையில், பாஜக கிழக்கு மாவட்ட தலைவர் கவியரசு, மற்றும் முன்னாள் மாவட்ட தலைவர் சிவப்பிரகாசம் ஆகியோர் முன்னிலையில் திமுக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கல்வியாளர் பிரிவு மாநில அமைப்பாளர் நந்தகுமார் பட்டியல் அணி கோட்ட பொறுப்பாளர் சிவராமன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கண்டன உரை நிகழ்த்தினார்கள். கிருஷ்ணகிரி பேருந்து நிலையம் அருகே நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பட்டியல் பழங்குடியின் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் நலத்திட்ட உதவிகளை மற்ற திட்டங்களுக்கு திசை திருப்பியதையும், இட ஒதுக்கீட்டு உரிமைகளை மதிக்காமல் ஆட்சி நடத்தும் திமுக அரசை கண்டித்து பட்டியல் அணி சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மகளிர் அணி தலைவிகளான சிலம்பொழி, சரண்யா, நகர தலைவர் விமலா, மாநில பொதுக்குழு உறுப்பினர் திருமலைபெருமாள், மாவட்ட பொதுச் செயலாளர்கள் ஆன எம்.ஆர்.ராஜேந்திரன், முருகேசன், சுமதி, மாவட்ட பொருளாளர் ராணா, எஸ்சி அணி முன்னாள் மாவட்ட தலைவர் ஆர் கே ரவி, பட்டியலின நகர தலைவர் கலையரசன், மாவட்டச் செயலாளர் ராமன், கோவிந்தன், பிரகாசம், மாவட்ட துணைத் தலைவர்களான சிவக்குமார், தாமோதரன், சுந்தரமூர்த்தி, ஊத்தங்கரை தொகுதி பொறுப்பாளர் சி கே சங்கர், கூட்டணி கட்சிகளான அதிமுக நகர செயலாளர் கேசவன், பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் மோகன்ராம், தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி சேர்ந்த பழனிகுமார், வன்னியர் சங்க மாவட்ட செயலாளர் சோமசுந்தரம், அதிமுகவை சேர்ந்த கார்த்திக்பால்ராஜ், எம்ஜிஆர் இளைஞர் அணி மாவட்ட செயலாளர் ஆஜி, ஓட்டுனர் அணி மாவட்ட செயலாளர் ராகுல், மாணவர் அணி மாவட்ட செயலாளர் எம் எஸ் குரு, அதிமுக ஐடி விங் மாவட்ட இணைச் செயலாளர் சந்துரு, நிர்மல், குமரவேல், உட்பட 200க்கும் மேற்பட்ட பாஜக கட்சியினர் பங்கேற்றிருந்தனர். போராட்டத்தின் போது திமுக அரசுக்கு எதிராக கண்டன கோஷங்கள் எழுப்பப்பட்டது. கிருஷ்ணகிரி போலீசார் ஏராளமானோர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# பெயிண்டர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களை கற்றுக் கொடுக்க இலவச திறன் மேம்பாட்டு பயிற்சி




கோவை, பிப். 19-

பெயிண்டர்களுக்கு நவீன தொழில்நுட்பங்களை கற்றுக் கொடுக்க இலவச திறன் மேம்பாட்டுத் திட்டத்தை கோவையில் ஸ்மைல் பவுண்டேஷன் - பெர்ஜர் பெயிண்ட்ஸ் ஆகியவை இணைந்து துவக்கி உள்ளன.ஸ்மைல் பவுண்டேஷன் மற்றும் பெர்ஜர் பெயிண்ட்ஸ் இந்தியா லிமிடெட் ஆகியவை இணைந்து கோவையில் 'ஐட்ரெய்ன் ஆன் வீல்ஸ்' என்ற திட்டத்தைத் துவக்கி உள்ளன.இது தமிழ்நாட்டில் தொடங்கப்படும் இரண்டாவது திட்டமாகும்.இந்த வாரத் தொடக்கத்தில், கர்நாடக மாநிலம் மைசூருவில் இதேபோன்ற ஒரு திட்டம் தொடங்கப்பட்டது.அது கர்நாடகாவில் தொடங்கப்பட்ட இரண்டாவது திட்டமாகும். பெர்ஜர் பெயிண்ட்ஸ் இந்தியா லிமிடெட் மற்றும் ஸ்மைல் பவுண்டேஷன் ஆகியவை 2021ம் ஆண்டில் இந்த 'ஐட்ரெய்ன் ஆன் வீல்ஸ்' திட்டத்தை செயல்படுத்த முடிவு செய்தன.இப்பயிற்சி மையங்கள் பெண்களுக்கு சமவாய்ப்பு அளிக்கும் இடங்களாகவும் உள்ளன.பெண்கள் இப்பயிற்சியில் கலந்துகொண்டு தங்கள் வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

இந்தியாவின் 26 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில் உள்ள பெயிண்டர்களுக்கு இந்தத்திறன் பயிற்சியானது முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது.

'ஐட்ரெய்ன் ஆன் வீல்ஸ்' திட்டத்தின் மூலம் இதுவரை நாடு முழுவதும் 3 லட்சத்து 15 ஆயிரம் பெயிண்டர்களுக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தற்போது 26 மாநிலங்கள் மற்றும் 3 யூனியன் பிரதேசங்களில், 51 பின்தங்கிய மாவட்டங்கள் உட்பட மொத்தம் 503 மாவட்டங்களில் செயல்பாட்டில் உள்ளது.

இதுகுறித்து பெர்ஜர் பெயிண்ட்ஸ் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி அபிஜித் ராய் கூறுகையில்,"சிறிய நகரங்கள் மற்றும் கிராமங்களில் உள்ள பெயிண்டர்களுக்கு இந்த பயிற்சியை அளிப்பதன் மூலம் அவர்களுக்கான சிறப்பான எதிர்காலத்திற்கு நாங்கள் வித்திடுகிறோம்.

ஸ்மைல் பவுண்டேஷனின் இணை நிறுவனரும் நிர்வாக அறங்காவலருமான சாந்தனு மிஸ்ரா கூறுகையில்,"நாட்டின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தில் திறன் மேம்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவில் திறமையான தொழிலாளர்களுக்கான தேவை அதிகம் உள்ளது.

இந்தியா முழுவதும் சிறப்பாகச் செயல்பட்டதற்காக இந்த திட்டம்,ஆண்டின் சிறந்த சமூகத் தொழில்முனைவோர் திட்டத்திற்கான விருதை சமீபத்தில் பெற்றது.சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களுக்காக, கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்திய வர்த்தக சபை, பெங்கால் வர்த்தக மற்றும் தொழில் சபை, இந்தியன் பிசினஸ் விருது,பாரத் சிஎஸ்ஆர் - சஸ்டெய்னபிலிட்டி விருது மற்றும் இம்பாக்ட்ரூட்ஸ் விருது ஆகியவற்றையும் இத்திட்டம் வென்றுள்ளது.

# ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுடன் காவல் போக்குவரத்து துறை கலந்தாய்வு கூட்டம்!



திருப்பூர், பிப்.19-

மாநகர பகுதியில் உள்ள தனியார் பள்ளி நிர்வாகத்தினர்களுடன் -போக்குவரத்து விழிப்புணர்வு கலந்தாய்வுக் கூட்டம் நடந்தது . திருப்பூர் மாநகர காவல் ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின்பேரில் போக்குவரத்து காவல் உதவி ஆணையர் மற்றும் போக்குவரத்து ஆய்வாளர்கள் (ரிகூஷிஸி மற்றும் கொங்கு நகர்) மூலம் மாநகரில் உள்ள சுமார் 25 தனியார் பள்ளிகளின் நிர்வாகத்தினர் › ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி ஆசிரியர்களுடன் போக்குவரத்து விழிப்புணர்வு கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது.

அக்கலந்தாய்வு கூட்டத்தில் காவல் துறையினர் பள்ளியில் பள்ளி படிக்கும் நிர்வாகத்தினரிடம் › அவர்களது மாணாக்கர்களை › அவர்களது பெற்றோர்கள் இரு மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் பள்ளிக்கு அழைத்து வருதல் / அழைத்து செல்லும் போது › பள்ளிக்கு வெளியே பிரதான சாலையில் இறக்கி /ஏற்றி செல்லுவதை தவிர்த்து பள்ளி வளாகத்தினுள் அவர்களது வாகனங்களை அனுமதிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதனை அடுத்து பள்ளி நிர்வாகத்தினரிடம் மாணாக்கர்களைக் கொண்டு சாலை ரோந்து பாதுகாப்பு (Road Safety Patrol) ஏற்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் பள்ளி ஆசிரியர்களிடம் மாணாக்கர்கள் மூலம் அவர்களது பெற்றோர்களுக்கு இருசக்கர வாகனங்களில் செல்லும் போது தலைக்கவசம் அணிவது மற்றும் அதன் பாதுகாப்பு அவசியத்தை தெரியப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டது.

# வேலூரை குறிவைக்கும் விஜய்

**வேலூர், பிப்.19–**

**தவெக தலைவர் விஜய் வரும் 23ஆம் தேதி வேலூர் அகரம்சேரி அருகே நடைபெறும் மக்கள் சந்திப்பில் பங்கேற்க உள்ள நிலையில், அதற்கான அனுமதி கோரி எஸ்.பி. அலுவலகத்தில் கட்சி நிர்வாகிகள் மனு அளித்திருக்கின்றனர்.**

**தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், முதன்முறையாக தேர்தலை சந்திக்கவிருக்கும் தமிழக வெற்றிக் கழகத்துக்கு விசில் சின்னத்தை தேர்தல் ஆணையம் ஒதுக்கியிருக்கிறது. தவெக தலைவர் விஜய் வரும் 13–ம் தேதி வேலூரில் நடைபெறும் மக்கள் சந்திப்பு விழாவில் பங்கேற்கவுள்ளார். இதைத் தொடர்ந்து, அதற்கான முறையான அனுமதி பெற வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவராமனிடம் தவெக வேலூர் மேற்கு மாவட்ட செயலாளர் தலைமையில் கடிதம் கொடுத்துள்ளது. அதற்கான முறையான அனுமதி பெற வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவராமனிடம் தவெக வேலூர் மேற்கு மாவட்ட செயலாளர் தலைமையில் கடிதம் கொடுத்துள்ளது.**

# நாகாவதி அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு



தருமபுரி, பிப்ரவரி. 19-

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் தாலுகா எர்ரப்பட்டி கிராமம் நாகாவதி அணையிலிருந்து 2025 26 ஆம் ஆண்டின் இரண்டாம் போக புன்செய் பயிர் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் சதீஷ் தலைமை தாங்கி நாகாவதி அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீரை திறந்து வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. மணி முன்னிலை வகித்தார். இது குறித்து ஆட்சியர் கூறியதாவது. நாகாவதி அணையில் இருந்து இரண்டாம் போக பாசனத்திற்காக வருகின்ற 26 5 2026 வரை 100 நாட்களுக்கு முறைவைத்து அதாவது முதல் ஐந்து நாட்களுக்கு ஒரு மண்டலத்திற்கும், அடுத்து ஐந்து நாட்களுக்கு இரண்டாவது மண்டலத்திற்கும் தண்ணீர் விட்டு பின்னர் ஐந்து நாட்களுக்கு நிறுத்தியம். மொத்தம் ஏழு நனைப்புகளுக்கு 117.91 மில்லியன் கன அடி தண்ணீரை தலைமை மதகின் வழியாக திறந்துவிட தமிழக அரசு ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி பெண்ணாகரம் தாலுகா நாகாவதி அணையில் இருந்து தற்போது உள்ள தண்ணீர் வரத்தை கொண்டும் பென்னாகரம் தாலுகாவில் உள்ள ஆயகட்டு பகுதிகளுக்கு பயன்பெறும் வகையில் 100 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்படுகிறது . இதன் மூலம் பென்னாகரம் தாலுகாவில் உள்ள அரகாசனள்ளி, சின்னம்பள்ளி மற்றும் பெரும்பாலை கிராமத்தில் உள்ள 1,993 ஏக்கர் நிலம் பாசன வசதி பெரும் . எனவே விவசாய பொதுமக்கள் நீர்வள ஆதாரத் துறையினருடன் ஒத்துழைத்து நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக விளைச்சல் பெரும் நோக்குடன் செயல்பட வேண்டும் என்று ஆட்சியர் கேட்டுகொண்டார். இந்த நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை நீர் வள ஆதார செயற்கு பொறியாளர் செந்தில்குமார் உள்பட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விவசாய சார்ந்த பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# கோவையில் சேதம் அடைந்த திருவள்ளுவர் சிலையை சீரமைக்க ஆர்ப்பாட்டம்!



கோவை, பிப்.19-

தமிழ்நாடு வள்ளுவர் மக்கள் முன்னேற்றக் கழகம் மாநிலத் தலைவர் விஜயகுமார் கோவை அவிநாசி ரோடு மேம்பாலம் மேல் பகுதியில் பல ஆண்டுகளாக நிறுவி உள்ள திருவள்ளுவர் சிலை எரிவாயு சமையல் கேஸ் வாகனம் விபத்து ஏற்பட்டு ஐயன் திருவள்ளுவர் சிலை சேதமடைந்தது ஏறத்தாழ ஓராண்டுக்கு மேல் சேதம் அடைந்த நிலையிலே காணப்படுகிறது ஐயன் சிலையை சீரமைக்குமாறு மாநிலத் தலைவர் விஜயகுமார் கேட்டுக்கொண்டார்

# தண்டராம்பட்டில் மகளிர் சுய உதவி குழு பொருட்கள் உற்பத்தி - கலெக்டர் நேரில் ஆய்வு



திருவண்ணாமலை. பிப்.19-

திருவண்ணாமலை அடுத்த தண்டராம்பட்டில் மகளிர் சுய உதவி குழு பொருட்கள் உற்பத்தி மற்றும் செயல்பாடுகள் குறித்து கலெக்டர் தர்ப்பகராஜ் நேரில் ஆய்வு செய்தார்.

திருவண்ணாமலை அடுத்த தண்டராம்பட்டு ஊராட்சியில் ஸ்ரீ சாய்பாபா மகளிர் குழுவினர் மகளிர் திட்டத்தின் மூலமாக ரூ.2 லட்சத்து 50 ஆயிரம் நிதி உதவி பெ ற்று பினாயில், பிளிசிங் பவுடர், ஆசிட், துணி சோப், துணி பவுடர், பாத்திரம் கிளினிக் சோப், பாத்திரம் கிளினிக் லிக்யூட் ஆகியவற்றை உற்பத்தி செய்து விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களது தயாரிப்பு பொதுமக்கள் மற்றும் மகளிர் குழு உறுப்பினர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்தப் பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் இந்த மகளிர் குழுவினருக்கு மாதம் சுமார் 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை வருமானம் கிடைத்து வருகிறது. வெற்றிகரமாக செயல்பட்டு வரும் சாய்பாபா மகளிர் குழு பொருட்கள் விற்பனை நிலையத்திற்கு கலெக்டர் தர்ப்பகராஜ் நேரில் சென்று ஆய்வு செய்து விற்பனையை மேலும் பெருக்குவதற்கான வழிகாட்டுதல்களை வழங்கினார். அப்போது மகளிர் திட்ட இயக்குனர் தனபதி, உதவி திட்ட அலுவலர் சந்திரகுமார், வட்டார இயக்க மேலாளர் சத்யராஜ் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உடன் இருந்தனர்.



**கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி மணி மஹாலில், வேளாண்மைத்துறை சார்பாக நடைபெற்ற மாவட்ட அளவிலான சிறுதானிய திருவிழா மற்றும் வேளாண் கண்காட்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் துவக்கி வைத்து, சிறுதானிய சாகுபடி மற்றும் மதிப்புக்கூட்டுதல் தொழில்நுட்பக் கையேடுகளை வெளியிட்டார். உடன், வேளாண்மைத்துறை இணை இயக்குநர் திரு.காளிமுத்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் வேளாண்மை .பா.ஏஞ்சலின் பொன்ராணி, துணை இயக்குநர் வேளாண் வணிகம் .மோகன், துணை இயக்குநர் வேளாண்மை .கலா, உள்ளிட்ட பலர் உள்ளனர்.**





# குளச்சல் துறைமுகப் பகுதியில் 4 பைபர் நாட்டு படகுகளில் தீ தீயணைப்பு வீரர்கள் அணைத்தனர்



குளச்சல், பிப்.19-

குளச்சல் துறைமுகம் அருகே உள்ள தூண்டில் வளைவு பகுதியில் ஏராளமான நாட்டு படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தன. இந்த நிலையில் நேற்று காலை திடீரென ஒரு நாட்டு படகில் தீப்பிடித்து எறிந்தது. நேரம் செல்ல அந்த நாட்டு படகுகளின் அருகில் நின்ற மற்ற நாட்டு படகுகளிலும் தீப்பிடித்து எரிய தொடங்கியது.

உடனடியாக இதுகுறித்து குளச்சல் தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

ஆனாலும் இந்த விபத்தில் 2 நாட்டு படகுகள் முற்றிலுமாக தீயில் கருகி சேதம் அடைந்தது. மேலும் இரண்டு நாட்டு படகுகள் பாதி அளவு எரிந்து இருந்தது. துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த நாட்டு படகுகள் தீப்பிடித்து எரிந்தது எப்படி? என்பது மர்மமாக உள்ளது. அதற்கான காரணம் குறித்து குளச்சல் போலீசில் விசாரணை நடத்தி வருகிறார்கள். இதற்காக அந்த பகுதியில் உள்ள சிசிடிவி காட்சிகளை கைப்பற்றி போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# மீன்பிடிக்க சென்ற இரவிபுத்தன்துறை மீனவர் ஆழ்கடலில் மாயம்



நித்திரவிளை, பிப்.19-

நித்திரவிளை அருகே இரவிபுத்தன்துறை பகுதியை சார்ந்தவர் ஆன்றணி ராஜ். இவருக்கு சொந்தமான சீ ஏஞ்சல் என்ற விசைப்படகில் ஆன்றணி ராஜ் மற்றும் இரவி புத்தன்துறை பகுதியை சார்ந்த ஜெர்பின் (31) உட்பட 16 பேர் கடந்த 13ம் தேதி தேங்காபட்டிணத்தில் இருந்து ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு தேங்காபட்டிணத்தில் இருந்து 118 கடல் மைல் தொலைவில் படகை நிறுத்தி வலையை விரித்து விட்டு அனைத்து மீனவர்களும் படுத்துள்ளனர். நேற்று காலையில் வழக்கம் போல் சக மீனவர்கள் எழுப்பி பார்த்த ஜெர்பினை காணவில்லை. மாயமான மீனவரை கடலில் தேடி பார்த்துள்ளனர். தொடர்ந்து தேங்காபட்டிணத்தில் இருந்து ஆழ்கடலில் மீன்பிடிக்க சென்ற மீனவர்களும் ஜெர்பினை கடலில் தேடி உள்ளனர். ஜெர்பின் குறித்து எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. தொடர்ந்து ஜெர்பினை மீனவர்கள் ஆழ்கடலில் தேடி வருகின்றனர்.

ஜெர்பின் கடலில் மாயமானது குறித்து சக மீனவர்கள் ஜெர்பின் உறவினர்களுக்கு தகவல் தெரிவித்துள்ளனர். கடலில் மாயமான ஜெர்பினுக்கு மனைவி மற்றும் மூன்று பிள்ளைகள் உள்ளனர். இரவிபுத்தன்துறை மீனவர் ஆழ்கடலில் மாயமான சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது



**திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் நேற்று முன்தினம் பட்டபகலில் திருடப்பட்ட சுமார் 42 பவுன் தங்க நகையை, மாவட்ட எஸ்பி.பிரதீப் உத்தரவின்பேரில், டிஸ்பி.இளஞ்செழியன், இன்ஸ்பெக்டர் சத்தியபிரபா தலைமையிலான காவல்துறையினர் திருடுபோன நகையை 36 மணி நேரத்தில் குற்றவாளிகளை பிடித்து திருடப்பட்ட 42 பவுன் நகையை பரிமுதல் செய்தனர். சிறப்பாக பணியாற்றிய காவல்துறையினருக்கு பொதுமக்கள் வெகுவாக பாராட்டு தெரிவித்தனர்.**

நாட்டு நடப்புகளை உடனுக்குடன் அறிய தின தமிழ் நாளிதழை தினந்தோறும் படியுங்கள்!

# கல்விப் பணிக்கு கரம் கொடுத்த போர்டு அறக்கட்டளை: வெலகலஹள்ளி பள்ளியில் நெகிழ்ச்சி



கிருஷ்ணகிரி, பிப்.19-

கிருஷ்ணகிரி அருகே உள்ள வெலகலஹள்ளி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, அந்தப் பகுதி மாணவர்களின் கல்வி ஒளியாகத் திகழ்கிறது. சமீபத்தில் பள்ளியின் வகுப்பறை மேல் தளம் பழுதடைந்து காணப்பட்டது. மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, இதனைச் சீரமைக்க போர்டு (திளிஸிஞ்) அறக்கட்டளை முன்வந்தது.பள்ளியின் பழுது நீக்கும் பணிகளுக்காக போர்டு அறக்கட்டளை சார்பில் ரூ. 10,000/- நன்கொடையாக வழங்கப்பட்டது. அறக்கட்டளைத் தலைவர் தேவ பிரசன்னா

தேவ பிரியா பேராயர் தேவ கிருபாகரன் ஆகியோர் தலைமை தாங்கினர். ஊராட்சி உதவியாளர் சுகேந்திரன், வார்டு உறுப்பினர்கள் முருகேசன், ராஜன்,ரவி ஆகியோர் முன்னிலை வகித்து சிறப்பித்தனர்.

மேலும், இந்தப் பொதுப்பணியில் ஊர் முக்கியஸ்தர்களான செந்தில்குமார், ஆனந்தன், மாதேஷ் சமூக சேவகர்கள் மாரி பிள்ளை, பிரியா, சிலம்பரசன், கோமதி, எப்சிபா மற்றும் திரிஷா ஆகியோர் கலந்து கொண்டனர். பள்ளியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக ஆசிரியர் சந்தோஷ்குமார், ஆசிரியைகள் சந்தியா, கௌரி, மற்றும் ஜெயந்திமாலா ஆகியோர் நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.

"கல்வி கற்கும் இடம் பாதுகாப்பாக இருந்தால் தான் மாணவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமையும்" என்பதை உணர்த்தும் விதமாக இந்தத் திட்டம் அமைந்தது.

நிகழ்வின் நிறைவாக, பள்ளியின் தலைமை ஆசிரியர் சீராமன் மாணவர்களின் நலன் கருதி உதவிய போர்டு அறக்கட்டளைக்கும், வருகை தந்திருந்த சான்றோர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

# கோவையில் நகர்ப்புற வீடற்ற ஆதரவற்றோர் தங்கும் விடுதி திறப்பு விழா



கோவை, பிப். 19-

கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம் வார்டு எண்.57க்குட்பட்ட நெசவாளர் காலனி பகுதியில் NULM தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்க நிதியின் கீழ் ரூ.2.67 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நகர்ப்புற வீடற்ற ஆதரவற்றோர் தங்கும் விடுதியினை கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி.ப.ராஜ்குமார் திறந்து வைத்தார்.

உடன் மேயர் திருமதி.கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் மாநகராட்சி ஆணையாளர் திரு.மா.சிவகுரு பிரபாகரன் மாநகர தலைமைப் பொறியாளர் திரு.விஜயகுமார், கிழக்கு மண்டலத்தலைவர் திருமதி.இலக்குமி இளஞ்செல்விகார்த்திக்,உதவி ஆணையர் திரு.ராம்குமார், மாமன்ற உறுப்பினர் திருமதி.சாந்தாமணி,உதவி செயற்பொறியாளர் திரு.கல்யாணசுந்தரம்,மண்டல சுகாதார அலுவலர் திரு.ராஜேந்திரன்,, உதவி பொறியாளர் செல்வி.ரோஜா, சுகாதார ஆய்வாளர் திரு.முருகேசன், பகுதி பொறுப்பாளர் கார்த்திகேயன் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளனர்.

# தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலத்தில் மக்கள் குறைதீர்க்கும் முகாம்



தூத்துக்குடி, பிப்.19-

தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு மண்டலத்தில் மக்கள் குறைதீர்க்கும் முகாம் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் மாநகராட்சி ஆணையர் பிரியங்கா முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மேயர் ஜெகன் பெரியசாமி பேசியதாவது: தூத்துக்குடி மாநகராட்சியில் 'மக்களைத் தேடி மாநகராட்சி' திட்டத்தின் மூலம் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது .

கடந்த இரண்டு ஆண்டுகளில் பெறப்பட்ட 4,500 மனுக்களுக்கும் முழுமையாகத் தீர்வு காணப்பட்டுள்ளது. மாநகராட்சியில் சாலை வசதிகள் பெருமளவு நிறைவு பெற்றுள்ளன. சிறிய தெருக்களில் பேவர் பிளாக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளது. அடுத்தகட்டமாக 278 புதிய சாலைகள் அமைப்பதற்கான டெண்டர் விடப்பட்டு, பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றது.இவை அனைத்தும் வரும் மே மாதத்திற்குள் முடிக்கப்படும். போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 20 அடி முதல் 60 அடி வரை உள்ள சாலைகள் விரிவாக்கம் செய்யப்பட உள்ளன. தற்போது 5.5 அடியாக உள்ள சாலை அகலம், 7 அடியாக உயர்த்தப்பட உள்ளது. இதற்காகச் சாலைகளின் இருபுறமும் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன.

பிரதான சாலையில் போக்குவரத்தைக் குறைக்க, நாம் தமிழர் வளாகத்தில் இருந்து மூன்றாவது மைல் வரை புதிய சாலை அமைக்க ஆய்வுப் பணிகள் முடிந்து, ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. இப்பணிகள் விரைவில் தொடங்கும்.

சில பகுதிகளில் உள்ள பழைய குடிநீர் குழாய்களை மாற்றும் பணி நடைபெறுவதால், பணிகள் முடியும் வரை பொதுமக்கள் குடிநீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். பக்கிள் ஓடையின் இருபுறமும் 7 அடியாக விரிவாக்கம் செய்வதற்கான ஆய்வுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றது என்று தெரிவித்தார்.

இந்த முகாமில் மொத்தம் 24 மனுக்கள் பெறப்பட்டன. ஒருவருக்கு மனு கொடுத்த 5 நிமிடத்திலேயே சான்றிதழ் வழங்கப்பட்டது. மற்ற மனுக்கள் மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு மேயர் உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சியில் துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், மண்டலத் தலைவர் கலைச்செல்வி, செயற்பொறியாளர்கள் வேலாயுதம், முனீர் அகமது, உதவிப் பொறியாளர் ராஜேஷ் கண்ணன், சுகாதார ஆய்வாளர் ராஜசேகரன், மற்றும் கவுன்சிலர்கள் சுரேஷ்குமார், ரெஸ்கிலின், தனலட்சுமி, மரிய கீதா, ராமு அம்மாள், பேபி ஏஞ்சலின், மும்தாஜ், மகேஸ்வரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.